(2) கூட்டிணைக்கப்பட்ட குழுவானது 1980 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க, வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்புக்கள் (பதிவு செய்தலும் மேற்பார்வை செய்தலும்) சட்டத்தின் நோக்கத்துக்காகவும் கருத்தெல்லைக்குள் வருகின்ற வலிந்துதவு சமூகசேவை ஒழுங்கமைப்பாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் அலுவல்களை முகாமை செய்வது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

*கூட்டிணைக்கப் பட்ட குழுவின் பொதுக் குறிக் கோள்கள்*

**3.** (1) கூட்டிணைக்கப்பட்ட குழு அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாக இருத்தல் வேண்டும்:-

(அ) இலங்கையில் புத்தசாசனத்தை நிலைநாட்டுவதற்குக் காரணமாயிருந்த அரஹத் மகிந்தரை நினைவூட்டு முகமாக பல்வேறு நினைவுகூறல் செயற்பாடுகளை நடாத்துதல்;

(ஆ) வீதி அபிவிருத்தி அத்துடன் வீடமைப்புத் திட்டங்கள் என்பவற்றைப் பொறுப்பேற்றலையும் மற்றும் வைத்திய சாலைகள், கல்வி நிலையங்கள், பாடசாலைகள். பிரிவேனாக்கள் மற்றும் சமுதாய நிலையங்கள் என்பவற்றை நிர்மாணித்தலையும் மேம்படுத்தலையும் செய்வதற்கு இயைபான அதிகாரசபைகளுக்கு உதவி செய்தல்;

(இ) முன்பள்ளிகளையும் நூல்நிலையங்களையும் தாபிப்பதற்கும், சாதனமளிப்பதற்கும் அத்துடன் பேணுவதற்கும் இயைபான அதிகாரசபைகளுக்கு உதவி செய்தல்;

(ஈ) சர்வதேச ரீதியில் “தம்ம”வைப் பரப்புவதில் ஈடுபடுதல் மற்றும் பௌத்தர்களிடையே பௌத்த தத்துவத்தையும் வாழ்க்கை முறையையும் பரப்புதலும் மற்றும் இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள வேறு பௌத்த ஒழுங்கமைப்புகளுடன் நட்புறவை ஏற்படுத்திக் கொள்ளல்;

(உ) வறியோர், ஏழைகள் அத்துடன் நோயாளர்களுக்கு மருத்துவ உதவி, உணவு அத்துடன் உறைவிடங்களை வழங்குவதற்கு இயைபான அதிகாரசபைகளுக்கு உதவி செய்தல்;

(ஊ) அநாதை இல்லங்களையும், வயோதிபர் இல்லங்களையும், சமூக நலன்புரி நிலையங்களையும் தாபித்தலும் கொண்டு நடாத்துதலிலும் மற்றும் செவிடர், ஊமை மற்றும் குருடர் மற்றும் அங்கவீனமுற்ற ஆட்கள் என்போருக்கான நலன்புரி வசதிகளை வழங்குவதிலும் இயைபான அதிகாரசபைகளுக்கு உதவி செய்தல்;

(எ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை எய்துவதில் ஈடுபட்டுள்ள வலிந்துதவு வேலையாட்களுக்கு நிதியுதவி அல்லது புலமைப்பரிசில்கள் அளித்தல்;

(ஏ) கல்வியையும் அறிவையும் முன்னேற்றுவதற்காக வறிய மற்றும் தகுதியுள்ள மாணவர்களுக்கு உதவிப் பணங்கள், புலமைப்பரிசில்கள், பரிசில்கள், நன்கொடைகள், நிதியுதவி அத்துடன் வேறுவகையிலான உதவி என்பவற்றை அளிப்பதற்கு இயைபான அதிகாரசபைகளுக்கு உதவி செய்தல்;

(ஐ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை ஒத்த குறிக்கோள்களையுடைய வேறு ஏதேனும் வெளிநாட்டு அல்லது உள்நாட்டு நிறுவனத்துடன் அல்லது ஒழுங்கமைப்புடன் ஒத்துழைத்தல்; அத்துடன்

(ஒ) கூட்டிணைக்கப்பட்ட குழுவின் குறிக்கோள்களை மேம்படுத்துவதற்கும் முன்னெடுத்துச் செல்வதற்குமெனக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் விருப்பமெனக் கருதக்கூடியவாறான மாநாடுகள், கருத்தரங்குகள், வேலைக்களங்கள், தொகுதிக் கற்கைகள், மற்றும் விரிவுரைகள் என்பனவற்றுக்கு அனுசரணையளித்தலும் மற்றும் அவற்றை நடாத்துதலும் அத்துடன் புத்தகங்கள், சஞ்சிகைகள், துண்டுப் பிரசுரங்கள், செய்தித்தாள்கள் மற்றும் பருவவிதழ்கள் என்பவற்றை அச்சிடுதலும், வெளியிடுதலும், விநியோகித்தலும்.

